# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்


*11, JALAN GEREJA, 43000 KAJANG*

**தொலைபேசி எண்** : *03-8733 1154*

**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*


*Scan for updates*

பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கு திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| ***03/05/2026*** **(ஞாயிறு)** | **காலை** *7.00*<br>**காலை** *9.30*<br>**காலை** *11.30*<br>**பிற்பகல்** *1.30* | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி மாண்டரின்<br>திருப்பலி தேசிய மொழி | பாஸ்கா 5ஆம் வாரம் ஞாயிறு |
| ***04/05/2026*** **(திங்கள்)** | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***05/05/2026*** **(செவ்வாய்)** | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***06/05/2026*** **(புதன்)** | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***07/05/2026*** **(வியாழன்)** | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***08/05/2026*** **(வெள்ளி)** | **காலை** *7.00* | திருப்பலி ஆங்கிலம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***09/05/2026*** **(சனி)** | **காலை** *7.00*<br>**மாலை** *5.30*<br>**மாலை** *6.00*<br>**மாலை** *7.30* | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி யூ.பி.எம் | அன்றைய திருவழிப்பாடு |
| ***10/05/2026*** **(ஞாயிறு)** | **காலை** *7.00*<br>**காலை** *9.30*<br>**காலை** *11.30*<br>**பிற்பகல்** *1.30* | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி மாண்டரின்<br>திருப்பலி தேசிய மொழி | பாஸ்கா 6ஆம் வாரம் ஞாயிறு |

### *1. திருக்குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பணிகள்*

இந்த ஆண்டிற்கான வருடாந்திர நிதி ஒதுக்கீட்டின் கீழ், **உலு லங்காட் மாவட்ட மற்றும் நில அலுவலகம்** நமது கல்லறைத் தோட்டத்தில் பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது:

1. **நீர் வடிகால் அமைப்பு** *(Drainage)*
2. **சாலைக் குறியீடுகள்** *(Road marking)*
3. **மரங்களைச் சீரமைத்தல் மற்றும் காய்ந்த மரங்களை அகற்றுதல்** *(Trimming, pruning and removal of dead trees)*
4. **உலோகத் தகடு வேலி அமைத்தல்** *(Metal deck hoarding)*
5. **சாம்பல் சேமிப்பகக் கட்டமைப்பு - கொலம்பாரியம்** *(Columbarium structure)*
6. **ஓய்வெடுக்கும் இடம்** *(Rest area)*
7. **நடைபாதை** *(Walkway)*
8. **சேதமடைந்த எல்லை வேலிகளைப் பழுதுபார்த்தல்** *(Repair of damaged perimeter fence)*
9. **சாம்பல் சேமிப்பகத்திற்கான முன் தயாரிக்கப்பட்ட மாடுலர் இடவசதிகள்** *(Pre-fabrication of modular niches for columbarium)*

தொடர்ந்து ஆதரவும் உதவியும் வழங்கி வரும் **சிலாங்கூர் மாநில அரசுக்கும்** மற்றும் **உள்ளூர் அதிகாரிகளுக்கும்** எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### *2. விவிலிய வகுப்பு 10.05.2026*

இம்மாத விவிலிய வகுப்பில் சீராக் நூல் பற்றித் தெரிந்து கொள்ளவிருக்கிறோம். கற்றுத் தேர்ந்த ஒருவர் இப்பாடத்தை நடத்துகிறார். யாவரும் கலந்து கொள்ளலாம்.



## அறிவிப்புகள் & பங்கு நிகழ்வுகள்

### 3. திருக்குடும்ப தேவாலயத்தின் இரட்டை விழா கொண்டாட்டம்

இந்த ஆண்டு நமது பங்கின் **125-வது ஆண்டு நிறைவையும்**, மில்லினியம் தேவாலயத்தின் *(Millennium Church)* **25-வது ஆண்டு நிறைவையும்** நாம் கொண்டாடுகிறோம்.இதனை முன்னிட்டு, **2026 மே 23 (சனிக்கிழமை)** அன்று மாலைத் திருப்பலிக்கு *(Sunset Mass)* பிறகு பங்கின் சிறப்பு விருந்து நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. நுழைவுச் சீட்டுகள் *(Tickets)* இந்த வார இறுதித் திருப்பலிகள் வரை மட்டுமே அல்லது 60 மேஜைகள் *(60 tables)* பூர்த்தியாகும் வரை மட்டுமே விற்பனை செய்யப்படும்.

**டிக்கெட் விவரங்கள்:**




- **விலை (ஒருவருக்கு):** RM 60.00
- **விலை (ஒரு மேசைக்கு - 10 பேர்):** RM 600.00

### 4. தங்கும் வசதியுடன் கூடிய வார இறுதி முகாம்

**உங்கள் திருமண வாழ்விற்கான ஒரு உயிர்நாடி (Archdiocese Family Life Commission வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி)**

உங்கள் திருமண வாழ்க்கையைச் சீரமைக்க இன்னும் நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் ஒருவருக்கொருவர் பிரிந்து வாழ்ந்தாலும் அல்லது விவாகரத்து செய்யும் எண்ணத்தில் இருந்தாலும், இதனைச் சரி செய்ய ஒரு வழி உண்டு. உங்கள் திருமண உறவைச் சரிசெய்ய நீங்கள் முயற்சி எடுக்கத் தயாராக இருந்தால், ***RETROUVAILLE*** உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

- **நாள்:** 12 (வெள்ளி) முதல் 14 (ஞாயிறு) ஜூன் 2026 வரை.

**கூடுதல் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:**

- **ஃபிரான்சிஸ் & ஏஞ்சலீன் (Francis & Angeline):** 016-3330660 / 012-2072150
- **மின்னஞ்சல்:** retrouvaille@familylife.archkl.org



**முக்கிய குறிப்பு:** உங்கள் விசாரணைகள் அனைத்தும் முழுமையாக ரகசியம் காக்கப்படும்.
**நீங்கள் விரும்பியபடியான ஒரு மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையைப் பெற இன்னும் தாமதமில்லை .**

### 5. கடன் திருநாள்

| திருப்பலி | நாள் /கிழமை | நேரம் | மொழி |
|---|---|---|---|
| எதிர்ப்பார்ப்பு ஆண்டவரின் விண்ணேற்ற திருப்பலி | 13.05.2026 (புதன்) | இரவு 8:00 | ஆங்கிலம் / மாண்டரின் |
| ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா | 14.05.2026 (வியாழன்) | காலை 6.30<br>இரவு 8:00 | ஆங்கிலம்<br>தமிழ் / தேசிய மொழி |




### 6.கோலாலம்பூர் மாவட்டங்கள் (மத்திய, வடக்கு மற்றும் தெற்கு) வளாகத் தொடர்பு முயற்சி - PLUG IN: கோலாலம்பூர் வளாக மாணவர்கள் சந்திப்பு (16 மே 2026)

கோலாலம்பூர் மறைமாவட்ட தனிநபர் மற்றும் இளைஞர் அலுவலகம் (**ASAYO KL**), உங்கள் பங்கினைச் சார்ந்த அனைத்துக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களையும், வரவிருக்கும் **"PLUG IN: KL CAMPUS GATHERING"** எனும் ஒன்றுகூடல் நிகழ்வில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறது.

**நாள்:** 16 மே 2026, சனிக்கிழமை **நேரம்:** மதியம் 2:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை
**இடம்:** டவான் டொமினிக் (Dewan Dominic), உயர் மறைமாவட்ட அருட்பணி மையம் (APC)
**வயது வரம்பு:** 18 - 26 வயது **குறைந்தபட்ச பங்களிப்புத் தொகை:** RM 5
**பதிவு செய்வதற்கான இணையப்பக்கம்:** https://asayokl.my/PluginKL
மேல் விபரங்களுக்கு: ஜோசபின் டான் (**Josephine Tan**), கசாண்ட்ரா (**Cassandra**), கார்ல் (**Carle**) ஆகியோரை மின்னஞ்சல் வழியாகவோ அல்லது **ASAYO** அவசர உதவி எண்ணான **+6018 590 3889** என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

### 7. CSSUKM வருடாந்திர முகாம் 2026

- **நாள்:** 8 மே 2026 முதல் 10 மே 2026 வரை
- **இடம்:** லா சால் மையம் (La Salle Centre), ஈப்போ

**மையக்கருத்து:** இந்த முகாம் இறைவார்த்தையால் ஈர்க்கப்பட்டு, **"அவர் நம்முடன் நடக்கிறார்" (லூக்கா 24:13-35)** என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறுகிறது.
**நோக்கம்:** பல்கலைக்கழக மாணவர்களிடையே ஆன்மீக வளர்ச்சி, தோழமை மற்றும் ஆழமான விசுவாசத்தை வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 8.BECCOT கூட்டம்

**நாள்:** 06/05/2026 (புதன்கிழமை)
**நேரம்:** இரவு 8:30 மணி
**இடம்:** அறைகள் 1 & 2, பழைய ஆலயக் கட்டிடம்
அனைத்து (Zone) மற்றும் (BEC) ஒருங்கிணைப்பாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வது **கட்டாயமாகும்**. ஒருங்கிணைப்பாளர்களால் வர இயலவில்லை என்றால், தங்களுக்குப் பதிலாகத் தங்களது மையக் குழுவிலிருந்து (Core team) ஒரு பிரதிநிதியை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**

**வார இறுதி காணிக்கை 25.04.2026 & 26.04.2026 : RM 17, 959.00**